சினிமா உலகம்

தீபாவளிச்சுடர் 1949 : 8 அணா.

கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ், மதராஸ். 4.



மகாவிரன் வாசன்

ஜெமினியின்
அபூர்வ
சகோதரர்கள்
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்
உணர்ச்சி மிகுந்த சித்திரம்.....
தீபாவளி தினத்தன்று
சென்னை
பிரபாத் வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் தமிழ்நாடெங்கும் ஆரம்பமாகிறது

மாடர்ன் தியேட்டர்ஸின்
பொன்முடி
எதிர்பாராத முத்தம்
தென் நாட்டு புரட்சி கவிஞர்
பாரதி தாஸன்
எழுதிய சிறந்த காதல் கவிதை
டைரக்ஷன்
எல்லிஸ் R. டங்கன்

சினிமா உலகம்

ஆசிரியர்: பி. எஸ். செட்டியார்

படம் 15 சென்னை அக்டோபர், 49 காட்சி 5

ஜெமினி 'அபூர்வ சகோதரர்கள்'

பூபதிக் கோட்டை ஜமீன்தார் மஹேந்திர பூபதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. ஒன்ருேடொன்று ஒட்டிக் கொண்டு பிறந்த அந்தக் குழந்தைகளை, டாக்டர் நஞ்சப்பா சிகிச்சையால் பிரித்து விடுகிருர்.

குழந்தைகள் பிறந்த வைபவத்திற்கு அழைப்பு இல்லாமலே எதிரியான தாண்டவன் கோட்டை ஜமீன்தார் மார்த்தாண்ட வர்மன் எதிர்பாராமல் திடீரென்று வந்து, பூபதிக் கோட்டையைத் தாக்கித் தீயிட்டு அங்கிருந்தோர் அனைவரையும் கொலை செய்கிருன். குழந்தைகளை மாத்திரம் டாக்டர் நஞ்சப்பா காப்பாற்றுகிருர். விஜயன், விக்கிரமன் என்று அக் குழந்தைகளுக்குப் பெயர். விஜயன் நாட்டிலும், விக்கிரமன் காட்டிலும் வளர்க்கப் படுகிருர்கள். விஜயனுக்கு ஏற்படும்உணர்ச்சிகளெல்லாம் விக்கிரமனுக்கும் உண்டாகின்றன. தக்க வயதடைந்ததும் இருவரையும் டாக்டர் அழைத்து அவர்கள் வரலாற்றைச் சொல்கிருர். தங்கள் குடும்ப எதிரியான மார்த்தாண்டனைப் பழிக்குப்பழி வாங்குவதென்று சகோதரர்கள் சபதம் செய்து கொள்கிருர்கள். நகரத்தில் இருந்த காஞ்சன என்ற கட்டழகி மீது விஜயன் காதல் கொள்கிருன். அவளும் அவனை நேசிக்கிருள்.

எதிரி மார்த்தாண்ட வர்மனும் காஞ்சனவை அடைய விரும்புகிருன். அவள் தந்தையைச் சிறையிலிட்டு, காஞ்சனவைத் தம் வசப்படுத்துகிருன். காஞ்சன தந்திரத்தால் தப்பித்து விஜயனேடு காட்டிற்குப் போகிருள். காட்டிலே விஜயனும், காஞ்சனவும் நடத்தும் காதல் வாழ்க்கையைக்கண்டு சகோதரன் விக்கிரமனல் சகிக்க முடிய வில்லை. காதலினல் சகோதரர்களுக்குள் சண்டை மூள்கிறது. அதைக்கண்ட காஞ்சன அங்கிருந்து போய் விடுகிருள். ஆனல் மறுபடியும் மார்த்தாண்டனிடம் சிக்கிக் கொள்கிருள். மார்த்தாண்டனுக்கு அந்த இரட்டைச் சகோதரர்கள் உயிரோடு இருப்பதும் தெரிந்து விடுகிறது. காஞ்சனவைக் கல்யாணம் செய்து கொள்ள மார்த்தாண்டன் ஏற்பாடு செய்கிருன். விஜயன் ஒரு நகை வியாபாரி போல் வந்து, ஏமாற்றிக் காஞ்சனவோடு வெளியேறும் சமயத்தில், மார்த்தாண்டன் கண்டு பிடித்து விடுகிருன். விஜயனைச் சிறையிலிட்டு மற்றவன் எங்கே என்று கேட்கிருன். எவ்வளவு ஹிம்சை ஏற்பட்டும் விஜயன் பதில் சொல்ல வில்லை. சவுக்கடி பட்டு மூர்ச்சையான விஜயனை, இறந்து விட்டானென்று சொல்லி டாக்டர் நஞ்சப்பா எடுத்துப் போய்க் காப்பாற்றுகிருர். விக்கிரமன் மார்த்தாண்டனை ஒழிக்க வருகிருன். ஆனல் சண்டையில் அடிபட்டு வீழ்கிருன். அப்போது விஜயன் அங்கே தோன்றி மார்த்தாண்டனைத் தாக்குகிருன். மார்த்தாண்டன் மடிகிருன். விக்கிரமனும் உயிர் பிரிகிருன். விக்கிரமனுக்குச் சமாதி கட்டி, வழிபட்டு வாழ்கிருர்கள் விஜயனும் காஞ்சனவும்.

இதுதான் 'ஜெமினி' 'அபூர்வ சகோதரர்கள்' படத்தின் கதைச் சுருக்கம். தமிழில் புதிய புதிய கதைகள் படங்களாக வெளிவரவேண்டும், அவற்ருல் பொதுஜன ருசி விருத்தியாகவேண்டும். மக்களின் சினிமா பார்க்கும் உற்சாகமும் வளரவேண்டும் என்ற நமது கருத்து, ஓரளவு இந்தப்படத்தால் நிறைவேறுகிறது. பிரசித்தி பெற்ற பிரஞ்சு கதாசிரியர் அலெக்ஸாண்டர்-டூமாஸ் அற்புதமாக சித்திரித்துள்ள 'கார்ஸிகன் பிரதர்ஸ்' என்ற கதையைத் தழுவியது இது.

ஜெமினி அதிபரும் ஓர் அபூர்வப் பிறவி; அதிசய மனிதர். முகப்பிலே அவர் உருவப் படத்தின்கீழ் **மகா வீரன் வாசன்** என்று நாம் குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருந்தும். அவருடைய அறிவும், துணிவும், உற்சாகமும் உழைப்பும் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. அவரிடம் நமக்கு அந்தரங்கமான விசுவாசத்தை உண்டாக்குகிறது. தமிழ்ப்பட உலகிலேயே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கி

விட்டார் அவர். தென்னிந்தியாவில் மாத்திரமல்லாமல் தமது இந்தி தயாரிப்புகளால் வடநாட்டிலும் திக் விஜயம் செய்து, எவரும் அடையாத வெற்றியை நிலை நாட்டிப் புகழ் பெறுகிறார். வெளியீடுகள் புதிய பாதையை வகுக்கின்றன. கதைகளில் புதுமை மாத்திரமல்ல, தயாரிப்பிலும் மறு மலர்ச்சி, நடிகர் தேர்விலும் வேறுபாடு. சம்பாஷணை, பாடல் அனைத்திலும் வித்தியாசம். புகழ்பெற்ற நட்சத்திரங்களையே நம்பிக் கிடக்கும் பட முதலாளிகளிடையே-கதைக்குத் தகுந்த-பாத்திரங்களுக்குப் பொருத்தமான எந்த நடிகரையும் இவர் அமர்த்துகிறார். தமிழ்ப் படத்திற்குக் கதை என்றால்-அதோடு ஒரு குட்டி ஹாஸ்யக் கதையும் ஓட்டிக்கொண்டு வரும். அதில் புகழ் பெற்ற ஹாஸ்ய ஜோடிகள் எதாவது கூத்தடிக்காமல் இருக்காது. இந்த மாமூல் விவகாரத்தை முறியடிக்கிறார் வாசன். கதையிலேயே அங்கங்கே ஹாஸ்யத்துளிகள் தெளிக்கப்படுகின்றன.

சினிமாப் படத்தில் வசனங்கள் எப்படி இருக்க வேண்டும்? 'அபூர்வ சகோதரர்கள்' வசனங்களை உதாரணமாகக் காட்டலாம். இலக்கியங்களைக் கசக்கிப் பிழிந்தோ, பராசம் போட்டுப் பாடல்போல் அமைத்தோ, சம்மந்தமில்லாமல் பிரசங்கம் அடித்தோ செய்யப்படும் பெரும்பாலான தமிழ்ப் படங்களின் சம்பாஷணை வேதனைக்கு விடுதலை அளிக்கிறது 'அபூர்வ சகோதரர்கள்.' மேல் நாட்டுப் படங்களைப்போல் சம்பாஷணைகளை மிக மிகக் குறைத்து, நடிப்பிற்குப் பிரதானம் கொடுக்கப்படுகிறது. இந்தப் படத்தில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்த அம்சம் இது. சம்பாஷணைகள் சுபாவமாகவும், சுருக்கமாகவும், சுவையாகவும், இருக்கின்றன. காதல் கட்டங்களில் சம்பாஷணைகள் என்றால் கவிதையாகப் பொழிந்து நம்மைத் திணர அடித்து விடுவார்கள் இதர சினிமா எழுத்தாளர்கள். இங்கே, 'அபூர்வ சகோதரர்க'ளில் ஹூம், அப்படீன்னா! என்று தொடங்கும் பேச்சின் எளிமையையும் இனிமையையும் ஏற்படும் ரசனையையும் பாராட்டியே தீரவேண்டும்.

படத்தில் பாடல்கள் மிகவும் சொற்பம். 'பியானோ'பாட்டு கேட்கத் தகுந்தது. சிரமசாத்தியமான இரட்டைச் சகோதரர்கள் வேஷங்களை எம். கே. ராதா தாங்கிப் பிரமாதமாக நடித்திருக்கிறார். மாறுபட்ட இரு வித மனோபாவங்களை அழகாகச் சித்திரித்துக்காட்டுகிறார். நகை வியாபாரியாகவும், வண்டிக்காரனாகவும் மாறுவேடம் பூண்டு வரும் கட்டங்களில் ராதாவின் நடிப்பு அருமையாக இருக்கிறது.

கதாநாயகி காஞ்சனாவாக, பானுமதி சக்கைப் போடு போடுகிறார். மார்த்தாண்டனிடமிருந்து வேலைக்காரியாக நழுவுமிடம், வெவ்வேறு பாஷைகள் பேசும் சிப்பாய்நளிடம் அந்தந்த பாஷையில் பாடி, ஆடி தப்பிக்கும் இடம், வண்டிக்காரன் மனைவியாகக் கம்பி நீட்டும் கட்டம்-இவைகளுக்காகவே ரஸிகர்கள் பல தடவை படத்தைப் பார்ப்பார்கள் என்பது நிச்சயம்.

கன்னட நடிகர் நாகேந்திரராவ் 'வில்லன்' மார்த்தாண்டனைச் சிறப்பாய் நடிக்கிறார். தமிழ்ப் பேச்சில் இவருக்கு இன்னும் சுத்தம் வேண்டும்.

டாக்டராக நடிக்கும் 'அம்மாஞ்சி' பட்டு ஐயர் பாதகமில்லை, அடைப்பைக்காரனாக எல். நாராயண ராவ் கிடைத்த 'சின்ன இடத்'தில் 'பெரிய வேலை'யைக் காட்டி, 'சபாஷ்' பெறுகிறார். மருதப்பாவாக ஸ்டண்ட் சோமு உணர்ச்சிகரமாக நடிப்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சூரியப்ரபாவும், லக்ஷ்மிப்பிரபாவும் தேவலை.

படத்தில் ரசிக்கத் தகுந்த நடனங்கள் சில இருக்கின்றன. எல்லாம் ஓட்டம்.

காணத் தகுந்த கத்திச் சண்டைகள், குதிரை சவாரிகள் உண்டு.

'அபூர்வ சகோதரர்க'ளில் ஆடையணிகள் அலங்காரங்கள், சம்பவங்கள் பழைய காலத்தை நினைவுறுத்துகின்றன. ஆனால், படத்தில் 'மின்சார விளக்கு' இருக்கிறது.

விஜயனுக்கு ஏற்படும் உணர்ச்சிகள் எல்லாம் விக்ரமனுக்கும் ஏற்படுகின்றன. ஆனால், விக்ரமனுக்கு ஏற்படும் உணர்ச்சிகள் விஜயனுக்கு உண்டாவதில்லை. ஏனோ!

விஜயனுக்கு உண்டாகும் உணர்ச்சி விக்ரமனுக்த ஏற்படலாம். ஆனால் விஜயன் காதலிக்கும் காஞ்சனாவை விக்ரமன் தான் பார்க்காமல் இருக்கும்போதே, தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியால் அவளை நேரில் முன்பே கண்டது போல் பேசுவது விந்தை.

மார்த்தாண்டன் காஞ்சனாவைக் கைப்பற்ற அவள் வீட்டுக்கு ஒரு சிறு படையோடு செல்ல வேண்டுமா ?

காஞ்சனா அவள் வீட்டின் கீழ்ப் பகுதியில் ஆட்களோடு ஆடிப் பாடி அட்டகாசம் செய்கிறாள். அது மேலே இருந்த மார்த்தாண்டனுக்குக் கேட்கவில்லை. ஆனால், அவள் தப்பிப்போன பிறகு, அடைபட்டிருந்த ஆட்கள் செய்த சப்தத்தைக் கேட்டு மாத்திரம் மார்த்தாண்டன் கீழே ஓடி வருகிறான்.

கால நிர்ணயம் (Time Lapse) சில இடங்களில் தவறுகிறது.

டாக்டர் நஞ்சப்பா காட்டிலிருக்கும் விஜயனுக்குப் புறாவின் மூலம் செய்தி அனுப்புகிறார். அதை மறைந்திருந்து பார்த்த மார்த்தாண்டனும், அவனுடைய ஆளும் கூண்டிலிருந்து மற்றொரு புறாவை எடுத்து விடுகிறார்கள். அது போய், முன்னே போன புறாவையும் திருப்பி அழைத்து வருகிறது. வந்த புறாக்கள் கூண்டுக்குப் போவது இயற்கை. ஆனால் முன்பின் தெரியாத மார்த்தாண்டன் ஆளின் கையில் வந்து விழுவதை ஆச்சரியம்.

டாக்டர் நஞ்சப்பா, இரட்டைக் குழந்தைகளை மீட்டுத் தம் வீட்டுக்குக் கொண்டு வந்த பிறகு, அங்கே வைத்தியம் செய்து கொள்ள வரும் மார்த்தாண்டன் ஆளும், அவனுக்குச் செய்யப்படும் நூதன வைத்திய முறையும் அவசியமில்லாத காட்சி. கதைக்கு இதனால் எவ்வித பலனுமில்லை.

இவ்வாறு சில குறைகள் இருந்தாலும் பட அமைப்பின் அருமையிலும், கதை செல்லும் வேகத்திலும் ஒரு தவறும் தெரியாமல் கருத்தைக் கவருகிறது.

டைரக்டர் ஸ்ரீ ஆச்சாரியா 'அபூர்வ சகோதரர்'களை அற்புதமான படமாக அளித்ததற்கு நமது பாராட்டைப் பெறுகிறார்.

'அபூர்வ சகோதரர்கள்' ஸ்ரீ வாசனுக்கு மற்றொரு பெரிய வெற்றி; தமிழ்ப் பட உலகின் முன்னணி; ரசிகர்களைப் பெரிதும் கவரும் காந்த சக்தி.

அடுத்த இதழில்

ஸ்ரீ கா. அப்பாத்துரை M. A. L. T., எழுதிய 'சிலப்பதிகாரமும், உலக நாடக இலக்கியக் கலையும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை வெளிவருகிறது.

கேள்வி:—நன்றாகப் பாடத் தெரிந்தவர்களை எல்லாம் முகவசீகரம் இல்லை என்று சொல்லி நடிக்க ஒப்பந்தம் செய்யும் பட முதலாளிகள் அவர்களிடமிருந்து குரல் இரவல் மட்டும் வாங்குகிறார்களே ? இதுவும் பட முதலாளிகளின் பணம் பறிக்கும் படலங்களில் ஒன்றா?

—காழி. சிவ. சொக்கன், சீர்காழி

பதில்:—சினிமாவில் நடிப்பதற்குக் காமிராவிற் கேற்ற முக அமைப்பும், நடிப்புத் திறமையும் அவசியம். காமிராவுக்கு ஏற்ற தோற்றம் இல்லாமல், நடிப்புத் திறமை மட்டும் இருக்குமானால் அவர் தோற்றத்திற்கும், திறமைக்கும் ஏற்ற வேஷமாகக் கொடுக்கலாம். ஆனால் நடிப்பைப் பற்றியோ, வேஷப் பொருத்தம் பற்றியோ இன்றைய சினிமா உலகில் எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. சினிமாவைப் பாட்டுக்கச்சேரியாக எண்ணி அப்பாவி பொதுஜனம் ரசிக்கும் வரையில் நல்ல பாடல்களாக பதிவு செய்ய வேண்டியதையெல்லாம் முதலாளிகள் செய்யத்தான் செய்வார்கள். தான் சாக மருந்து குடிப்பவர்களுண்டா, தற்கொலை செய்து கொள்ளத் துணிபவர்களைத் தவிர?

கே:—'வேலைக்காரி'யை அண்ணா துரை தான் டைரக்ட் செய்தார் என்பதாக ஏ. எஸ். ஏ. சாமி செப்பினாராமே! உண்மையா ?

—சு. செல்வராஜன், நன்னிலம்

ப:—யானறியேன் பராபரமே; சாமி சொன்னதைக் கேட்ட யாராவது உம்மிடம் சொன்னால் நீர் நம்பலாம்.

கே:—சக்தி நாடக சபையார் இப்பொழுது எங்கு நாடகம் நடத்துகிறார்கள்? 'கவியின் கனவு' சக்தி நாடக சபையாருக்கு உரிமையா? ஆசிரியர் எஸ்.டி. சுந்தரத்திற்கா?

—ப. துரைராசன், இராதாமங்கலம்.

ப:—திண்டுக்கல்லில் நாடகம் நடித்துவதாகத் தெரிகிறது. நாடக உரிமை யாருக்குச் சொந்தம் என்பது திட்டமாக எனக்குத் தெரியாது. சுந்தரத்திடம் விசாரித்துப் பாரும்.

கே:—'மாயாவதி'க்குப் பாட்டுப் போட்ட ஷரீபுக்கும், மருதகாசிக்கும் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார்கள்? பாட்டுகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

—ப. கிருட்டிணமூர்த்தி, இராதாமங்கலம்.

ப:—என்ன கொடுத்திருந்தால் நமக்கென்ன? பாடல்களைப் பற்றிய என் அபிப்பிராயமா? சுமார் ரகம் என்பதுதான்.

கே:—பத்திரிகைக்காரர்கள் பட விமர்சனம் செய்கிறார்களே! அவை அவர்கள் பத்திரிகைக்குக் கிடைக்கும் விளம்பரத்தைப் பொறுத்தா? அல்லது ஆராய்ந்து உண்மையை எழுத வேண்டும் என்ற உத்தேசத்தைப் பொறுத்தா?

சு. செல்வன், சென்னை.

ப:—எல்லாம் உண்டு. நேர்மைக்காக, நேர்மையான விமர்சனம் என்பது அபூர்வமாகத்தான் காண முடியும். பெரும்பாலான விமர்சனங்கள் கிடைக்கும் விளம்பர விகிதாசாரம், படமுதலாளி, டைரக்டர்களின்முகத்துக்காக, நடிகை, நடிகரின் புன் சிரிப்புக்காக என்ற தன்மையில்தான் வெளி வருகின்றன.

கே:—பி.எஸ்.சரோஜாவின் கணவர் இறந்து விட்டாரே? அவர் ஏன் மறு மணம் செய்து கொள்ளக்கூடாது?

—இரா. மாசிலாமணி, நன்னிலம்.

ப:—அது அவர் சேர்ந்த விஷய மல்லவா? அதைப்பற்றி உமக்கேன் கவலை? இது மாதிரிக் கேள்விகள் கேட்க வேண்டாம் என எத்தனையோ தடவை எவ்வளவோ பத்திரிகைக்காரர்கள் சொல்கிறார்களே, நீர் ஏன் திருந்தக் கூடாது,

கே:—'மங்கையர்க்கரசி'யில் பழம் வாங்கி வரப் போன டி. எஸ். துரைராஜ் என்ன ஆனார்? ஏன் திரும்ப வர வில்லை? படத்தில் அவருக்கு நடிக்கப் போதுமான சந்தர்ப்பம் இல்லாமல் அவர் ஏன் இப் படத்தில் நடிக்க வேண்டும்?

—பி.லோகநாதன், காவாங்கரைபொழில்

ப:—பழத்தை வாங்கி சாப்பிட்டு விட்டுச் சுகமாகத் தூங்கி யிருப்பார். சந்தர்ப்பம் சம்பந்தம் எல்லாம் இருக்கிறதா, அவசியம்தானா என்பதை யெல்லாம் குறித்துத் தமிழ்ப்பட முதலாளிகள் கவலைப்படுவது கிடையாது. கூடுமானவரை எத்தனை நட்சத்திரங்களை ஒரு படத்தில் அடைக்க முடியுமோ அவ்வளவு அடைப்பது, அவர்கள் பெயரை விளம்பரப் படுத்தி மக்களுக்கு மயக்கம் உண்டு பண்ணிப் பணம் பறிப்பது என்பதுதான் அவர்கள் கையாளும் கலை.

கே:—'மங்கையர்க்கரசி'யில் காளி கோயிலில் நாட்டியம் கருத்துக்கு உகந்ததாகத் தெரிய வில்லை. அனாவசியமாக அந்த இடத்தில் அதைச் சேர்ப்பானேன்?

—பி.லோகநாதன்,காவாங்கரைபொழில்.

ப:—மேலே சொன்ன பதில்தான் இதற்கும். நாட்டியத்திற்கு, மவுசா, போடு நாலு டான்ஸு ஸீக்வன்ஸ் என்ற சித்தாந்தம்தான். லலிதா-பத்மினி டிரில் இல்லாத படம் இல்லை என்றாகி விட்டது!

பரணி 'லைலாமஜ்னு'வில்

'லைலாமஜ்னு' தெலுங்குப் படம்
சென்னை பாரகனில் வெற்றிகரமாக நடைபெறுகிறது.
தமிழ்ப்படம் சென்னை நகரில் சீக்கிரம் வெளிவரும்.

Edited & Published by P. S. CHETTIAR, 80, General Patters Road, Madras-2.
Printed by Radhakrishna Chettiar, at The Royal Printing Works, 11-A, Mount Road, Madras.
Associate Editor R. S. Gomathinayagam.

என்ன.... எங்கே...... எப்போது...?

● தீபாவளி தினத்தில் வெளியான படங்கள்; ஜெமினியின் 'அபூர்வ சகோதரர்கள்', ஆர்.கே. எஸ். பிக்சர்ஸ் 'தேவ மனோகரி' இரண்டும்.

ஜெமினி நிஷான் (இந்திப் படம்) வட நாட்டில் வெளியாகி விட்டது.

இவைகளுக்கு முன்பே சியாமளாவின் 'இன்ப வல்லி' வெளியாகி ஓடிக் கொண்டிருக்கிறது.

நவம்பர் 5-ஆம் தேதி பரணியின் 'லைலா மஜ்னு'வை ஜுபிடர் பிக்ஸர்ஸ் சர்க்யூட் தமிழ் நாட்டின் பல முக்கிய நகரங்களில் திரையிடப் போகிறது.

● பொங்கல் புது நாளிலும் அதற்கு முன்னதாகவும் 'கிருஷ்ணவிஜயம்', 'ரத்னகுமார்' 'பொன் முடி', 'வாழ்க்கை', 'ராஜ விக்ரமா' ஆகிய படங்கள் வெளி வர இருக்கின்றன.

● விஜய தசமி தினத்தன்று மினர்வா பிக்ஸர்ஸ் 'சித்ராங்கி' படத்திற்கு வாஹினி ஸ்டுடியோவில் ஆரம்ப விழா நடத்தினர்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் 'வடுவூ'ரின் 'திகம்பரசாமியா'ரைப் படமாக்கப் பூசை போட்டிருக்கிறார்கள். ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் இப்படத்தை டைரக்ட் செய்வார். 'பொன் முடி'க்கு அடுத்தபடி டைரக்டர் எல்லிஸ். ஆர். டங்கன் 'மந்திரி குமாரி' என்ற நாடகத்தைப் படமாக்குவார் என்று தெரிகிறது.

தீபாவளி தினத்தன்று நகைச் சுவை அரசு என்.எஸ். கிருஷ்ணன் 'தம்பி துரை' என்ற தமது புதிய படத்தை அறிவித்திருக்கிறார்.

● பக்ஷிராஜாவின் 'ஏழை படும் பாடு', லாவண்யாவின் 'பாரிஜாதம்' பாலாஜியின் 'லைலா மஜ்னு' இவை துரிதமாகத் தயாரிக்கப்படுகின்றன என்று தெரிகிறது.

ஜுபிடர் பிக்ஸர்ஸ் 'கரிகாலன்' என்ற புதிய படத்தை ஆரம்பிக்கலாம்.

● ஹரிபாய் தேசாய் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் 'உண்மையின் வெற்றி' என்ற தமிழ்ப் படத்தைப் பிடிக்கிறார்.

● நடிக டைரக்டர் கெம்பராஜ் தமது 'ராஜ விக்ரமா' தமிழ், கன்னடப் படங்களை ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் மிகவும் சிரத்தையோடு தயாரித்து வருகிறார். சுவாரஸ்யமான கதையையும், அழகும் புகழும் உள்ள நடிகர்களையும் கொண்டு தயாராகும் இப்படங்களைப் பொங்கல் தினத்திலேயே வெளியிட வேண்டும் என்பது திட்டம்.

● டைரக்டர் ஜோசப் தலியத் தமது 'இதய கீத'த்தை ஒப்பற்ற படமாக்க அல்லும் பகலும் உழைத்து வருகிறார். ஒவ்வொரு அம்சமும் விசேஷ சிரத்தையோடு கவனித்துச் செய்யப் படுகிறது.

● தென்னிந்திய சினிமா நிபுணர்கள் மகாநாடு தேனாம் பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அக்டோபர் 30-ஆம் தேதி நடைபெறு மென்று தெரிகிறது.

● திருவல்லிக்கேணி ஸ்ரீ ஸரஸ்வதி கான நிலயத்தின் மாணவிகளும், மைலாப்பூர் சார்ட்டர்ட் அக்கௌண்டண்ட் ஸ்ரீ. வி. சௌந்தரராஜ அய்யங்கார் குமாரத்திகளுமான குமாரி வி.எஸ். வசந்தா வி.எஸ். சியாமளாவின் பரதநாட்டிய அரங்கேற்று விழா 14-10-49 மாலை 6 மணிக்கு மைலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடைபெற்றது. ஸ்ரீமதி ருக்மிணி தேவி தலைமை வகித்தார். அவர் நிலயத் தலைவி ஸ்ரீமதி கே.லலிதா நடனக்கலைக்காக செய்து வரும் சேவையைப் பற்றி சிலாகித்துப் பேசி, நடனமாடிய இரு பெண்களையும் ஆசீர்வதித்தார்.

● திருவாரூர், மடப்புரம் தட்சணாமூர்த்தி சுவாமிகள் குரு பூசையில் ஆவணி 10-ஆந் தேதி ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் தக்க பக்க வாத்தியங்களோடு பிரமாதமாகக் கச்சேரி செய்தார். அதுசமயம் விஜயபுரம் பிரபல வியாபாரி ஸ்ரீ கே. எஸ். எஸ். ராஜன் பாகவதரை வரவேற்றுப் பெரிதும் உபசரித்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இந்த இதழின் கடைசியில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அதில் பாகவதரோடு ஸ்ரீ கே. எஸ். எஸ். ராஜன், நாதசுர வித்வான் குளிக்கரை பிச்சையப்பா ஆகியோர் இருப்பதைக் காணலாம்.

'மங்கையர்க்கரசி'யில்

கவிக்கு உயிர் கொடுத்த காவலன்

'சுரபி'

இச் சிறு நாடகத்தை அருமையாக எழுதியவர்-சுவைபடக் கவிதைகள் புனையும் 'சுரபி' [ஜெ. தங்கவேல் பி. ஏ.] ஆவர். நடிகர் திலகம் எம். கே. தியாகராஜ பாகவதர் தற்போது நடித்துத் தயாரிக்கும் 'அமர கவி' இதே கதைதான். எனவே முன்னதாக 'அமர கவி' வரலாற்றை, அதுவும் நாடகமாக-அன்பர் 'சுரபி'யின் பேனவிலிருந்து அனுபவிக்கக் கிடைப்பது ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்ப மென்றெண்ணி மகிழ்ச்சி யோடு இதைப் பிரசுரிக்கிறோம்.

—ஆசிரியர்

நாடக பாத்திரங்கள்

நந்திவர்மன் : பல்லவ சக்கரவர்த்தி

மஹேந்திரன் : நந்திவர்மன் தம்பி

பிரம ராயர் : மந்திரி

அக்கதேவர் : ஆஸ்தான பண்டிதர்

சபையோர்

பிரஜைகள் :

நந்திவர்மனின் கொலு மண்டபம் [சின்னம் ஒலிக்கிறது முரசு முழங்குகிறது]

மெய்க்காவலன்: ராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட- ராஜ கம்பீர- பல்லவ குலதிலக- நந்திவர்ம சக்கரவர்த்தி வருகிறார். பராஆக்!

[சின்னமும் முரசும்]

சபையோர்கள்: ஜய விஜயீபவ !ஜயவிஜயீபவ !

நந்திவர்மன்: சபையோ ரனைவர்க்கும் நமஸ்காரம்.

ஆஸ்தான பண்டிதர்: எண்டிசை புகழும் மண்டலாதிபதி, தண்டமிழ் வளர்க்கும் பண்டித மாமணி நந்திவர்ம பல்லவ சக்கரவர்த்தி...

அனைவரும்: வாழ்க!

ஆஸ். பண்: வேந்தர் வேந்தே, இன்று தங்கள் காணிக்கைக்காக அடியேன் கொய்து வந்த பாமலரை ஏற்றருள வேண்டும்.



'மீதவமம்னுஹா'யில பானுமதி

நந்தி: [சிரித்துக் கொண்டே] கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா?

ஆஸ். பண்: "ஆடுங் கடை மணி நாவசையாமல் அகிலமெலாம் நீடுங் குடையில் தரித்த பிரானென்றும்—"

நந்தி: தயை செய்து சற்றே நிறுத்துங்கள். பிற்பகுதி என் மனத்திலே பிறந்து விட்டது...."நித்த நவம் பாடுங் கவிப்பெருமானக்க தேவன் பதாம்புயத்தைச— சூடுந் தவப்பேற்று நந்தியென் றேயென்னைச்சொல்லுவரே"

சபையோர்: அடாடா! என்ன வினயம்! என்ன தமிழ்ப்பாசம்!

நந்தி: தனபாலரே, நமது ஆஸ்தான கவி அக்கதேவருக்கு ஆயிரங் கழஞ்சு பொன்னும் ஒரு கனக தண்டியும் வழங்குங்கள்.

ஆஸ். பண்: அரசர் பெரும, அந்தப் பரிசிலில் பாதிக்கு மேல் தங்களுக் கன்றோ உரியது?

நந்தி: நன்றாய்ச் சொன்னீர்கள். போஜராஜன் அக்ஷர லக்ஷம் வழங்கினன் என்பார்கள். பாதிப் பாட்டுக்கு ஐந்நூறு கழஞ்சு பொன் கொடுத்து ஏய்த்து விடலாமென்று பார்க்கிறீர்கள்!

சபையோர்: [சிரிக்கின்றனர்]

நந்தி:-சரி, பிரமராயரே, நமக்கு இந்த வியாபாரம் வேண்டாம். இனி நாம் குடிகளின் சேவகத்தை ஆரம்பிப்போம். இன்று ஏதாவது விசேஷ முண்டா?......என்ன தயங்குகிறீர்?

பிரம:-இல்லை, இன்றைக் கொரு விசாரணை...

நந்தி:-என்ன! விசாரணையா? குற்ற விசாரணையா?

பிரம: ஆமாம் அரசே.

நந்தி: மெய்யாகவா!என்னுடைய ராஜ்யத்திலா குற்றம்! இந்தக் கொலு மண்டபத்திலா குற்ற விசாரணை! சரி குற்றவாளி யார்?

பிரம: குற்றவாளி... தங்களுடைய............

நந்தி: இதென்ன என்று மில்லாமல் இன்று இப்படித் தயங்குகிறீர்? காவலர்களே, குற்றவாளியை உடனே இங்கு அழைத்து வாருங்கள்.

[காவலர்கள் மகேந்திரனைச் சங்கிலியிற் பிணைத்துக் கொண்டு வருகின்றனர்]

மகேந்திரன்: சும்மா விடுங்கள் என்னை. ரொம்ப அழகா யிருக்கிறது இந்த ஆட்சி!

[திமிருகிறான்]

நந்தி: [திடுக்கிட்டு] யார்! மகேந்திரனா! என் உடன் பிறந்தவனா என் கொலு மண்டபத்திலே குற்றஞ் சாட்டப்பட்டு நிற்கிறான்!

மகேந்திரன்: ஆமாம், சாக்ஷாத் உங்கள் கூடப் பிறந்த தம்பிதான். உங்கள் ஆட்சியின் அழகு அவ்வளவி லிருக்கிறது!

நந்தி:-மகேந்திரா, பதறாதே. பகலவன் திசை மாறினாலும் பல்லவன் நெறி மாறாது.

மகேந்திரன்: நெறி! தான் புனைந்த கவியைத் தான் பாடுவதற்கும் உரிமை யில்லாத ராஜ்யத்தில் நெறி யென்ன வேண்டியிருக்கிறது!

நந்தி: பிரமராயரே, விஷயமென்ன சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் விளங்க மாட்டேனென்கிறது. தமிழ்த் தேவி தனியரசு செலுத்தும் நமது ராஜ்யத்தில் தமிழ்க் கவிக்குத் தடை யென்றால்?

மகேந்திரன்: நான் சொல்லுகிறேன். நேற்றிரவு என் காதலியின் இல்லத்திலே, நான் புனைந்த கவி யொன்றை வேடிக்கையாகப் பாட ஆரம்பித்தேன். இரண்டடி பாடினேனோ இல்லையோ, உடனே உங்கள் காவலர்கள் வந்து என்னைக் கைதியாக்கிவிட்டனர். சிறையிலும் வைத்தனர். அப்புறம் இதோ இந்த மரியாதைகளுடன்-கையில் விலங்குகளுடன் உடலில் சங்கிலியுடன்-இங்கே கொண்டு வந்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

நந்தி: எங்கே, நீ பாடிய அடிகளைக் கேட்போம்.

மகேந்திரன்: செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்—
சந்தனமென் றூரோ தடவினர்.

நந்தி:- ஆஹா, பாட்டா இது! கவிதைச் சுவையையே சாறு பிழிந்து கொடுத்ததுபோலல்லவா இருக்கிறது!

பிரம: அரசே, பாட லென்னவோ ஈடெடுப்பில்லாதது தான். ஆனால், அமுதத்திலே நஞ்சைக் கலந்து வைத்திருக்கிறார் தங்கள் இளவல் மகேந்திரர். இப்படி ஒரு பாட்டல்ல, நூறு பாடி யிருக்கிறார். தங்களையே நாயகனாக வைத்துப் பாடியவைதான். ஒவ்வொன்றிலும் அறம் வைத்துப் பாடியிருக்கிறார். அவை தங்கள் செவியில் ஏறிய உடனே தங்கள் உயிருக்கு ஹானி சேர்ந்துவிடும். இதையறிந்துதான், நமது நாட்டிலே இந்தப் பாடல்களில் எதையும், யாரும் படிக்கவோ பாடவோ கூடாதென்று நான் தங்களுக்குத் தெரியாமலே ஒரு உத்தரவு பிறப்பித்தேன். நேற்று நள்ளிரவில் உத்தரவை மீறி இப்பாடலை இவர் பாடவே, உடனே வேவுகாரர்கள் இவரைக் கைது செய்திருக்கிறார்கள். நீதி தேவதைக்கு அரசன்-ஆண்டி

'ராஜ விக்ரமா'வில் எம். வி. ராஜம்மா

என்ற வித்தியாச மில்லை யல்லவா?

நந்தி: பேஷ்! விசித்திரமாக அல்லவா இருக்கிறது வழக்கு! சரி, குற்ற விசாரணை இருக்கட்டும். இப்போது அந்தப் பாடல் முழுவதையும் கேட்டுவிட வேண்டுமென்று எனக்குப் பதைக்கிறது. தம்பி, எதோ; பாடு, கேட்போம்.

மகேந்: இவ்வளவு பெரிய சதஸிலே, இத்தனை அறிஞர்கள் காதிலே ஒலிக்கும் பாக்யம் என் பாடல்களில் ஒன்றுக்காவது வாய்க்குமென்று நான் கனவு கூடக் காணவில்லை. சரி சொல்லுகிறேன்: காதலனைப் பிரிந்த காதலி கட்டிலிற் படுத்துத் தூண்டிற்



'அம்பிகா தேவி'யில் ராஜம்மா

புழுவாய்த் துடிதுடித்துக் கிடக்கிறாள். காதலின் வேகம் வேதனைத் தீயாய் மாறி அவளைத் தகித்துத் தள்ளுகிறது. உடம்பு நெருப்பாய்க் காய்கிறது. தொட்டுப் பார்த்தாள் செவிலி. 'ஐயோ இப்படி நெருப்புப் பொறி பறக்கிறதே' என்று அங்கலாய்த்துப் பக்கத்திலிருந்த சந்தனத்தை எடுத்து நாயகியின் மார்பில் தடவினாள். அவ்வளவுதான்; ஓம குண்டத்தில் நெய் சொரிந்தது போலாய்விட்டது. அலறுகிறாள் அந்தப் பெண். எப்படி? கேளுங்கள்:

செக்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றூரோ தடவினார்-பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மீது:

சபையோ:-தீ! தீ! கொலு மண்டபத்திலே நெருப்புப் பிடிக்கிறது.

[அல்லோலகல்லோலமாய்க் கூவுகிறார்கள்]

நந்தி: [தன்னை மறந்து லயித்திருந்தவன்] எங்கே நெருப்பு?

சபையோர்: அதோ அந்த ஈசான்ய மூலையில் பாருங்கள்.

நந்தி: சரி, காவலர்களே, அதை உடனே அணையுங்கள். தயை செய்து எல்லாரும் சற்று அமைதியாய் அமர்ந்திருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றே, இந்தக்கொலு மண்டபத்திலேயே, இப்போதே, என் தம்பி பாடிய கலம்பகத்தின் அரங்கேற்றம் நடைபெறும். தம்பி, பரதன் உடன் பிறந்ததால் ராமனின் மகிமை பன் மடங்கு அதிகமாயிற்று. நீ என்னுடன் பிறந்ததால் என் ஜன்மம் சிறப்படைந்தது. ஆஹா! இந்த ஒரு பாட்டே என்னை இப்படி உருக வைத்துவிட்டதே! இதைப் போல் இன்னும் தொண்ணூற்றென்பது பாடல்கள்! என் செவியின் பாக்யம்! எனது தவத்தின் பயன்! தமிழன்னையின் பேரருள்! எங்கே, கலம்பகத்தில் முதல் பாட்டைக் கேட்போம்.

[மகேந்திரன் மௌனமாய் நிற்கிறான்]

நந்தி: ஏன், என்ன தயக்கம்?

பிரம: வேந்தர் பெருமானே, மன்னிக்க வேண்டும். நான் சொல்லுகிறேன். அவருடைய மனதே அதற்கு இடங் கொடுக்கவில்லை. கவி யென்னவோ தெய்வீகமானது தான். ஆனால் ருசிக்காக நஞ்சை அருந்தலாமா? குடிகள் சார்பில் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் கண் போன்ற காவலனை எங்களுக்காகக் காப்பாற்றிக் கொடுங்கள்.

நந்தி: மதிமந்திரியாரே, உங்கள் விசுவாசத்தை நான் மெச்சுகிறேன். ஆனால் என்னுடைய சபலத்தையும் நீங்கள் அறிவீர்கள் அல்லவா? தமிழ்தான் எனது ஜீவநாடி; தமிழ்க் கவிதைதான் எனக்குத் தாரக மந்திரம். இவ்வளவு அற்புதமான கவிகளை, அதுவும் என் சொந்தச் சகோதரன் புனைந்தவைகளைக் கேளாமல் நான் எப்படி இருப்பேன்?.........தம்பி, மகேந்திரா, ஆகட்டும் அரங்கேற்றம்.

மகேந்: (மனங் கசிந்து) அண்ணா, நானோர் துரோகி, சகோதரத் துரோகி. புருஷோத்தமனை பரதாழ்வாருக்காக ராமபிரான் நாட்டைத் துறந்தான். தாங்களோ தங்களையே கொல்ல நினைந்த சண்டாளனை என் பாடலுக்காக உயிரைத் துறக்கத் துணிந்து நிற்கிறீர்கள். ஆமாம், தங்களிடம் பொறாமை கொண்டு, தங்களைத் தொலைத்து விடத்தான் நான் வழிதேடினேன். அதுவும் சாதாரணப் பொறாமையன்று. தாங்கள் இந்தப் பரந்த ராஜ்யத்தை ஆளுகிறீர்களே என்று எனக்குப் பொறாமையில்லை; இப்படி வெற்றி மாலை சூடுகிறீர்களே என்று நான் அழுக்காறு கொள்ளவில்லை. இத்தனை முடி மன்னர்கள் தங்களை அடி தொழுகிறார்களே என்று என் உள்ளம் குமுறவில்லை.

நந்தி: மகேந்திரா, பின்னே உன் மனம் நாடியது தான் என்ன? எதற்கும் நீ பாத்திரன்தான். உன் பாடல் ஒன்றே உலகத்தை விலை பேசுமே.

மகேந்: பாடல்தான் அண்ணலே பாடல்தான். நாளும் நவநவமாய் அற்புதக் கவிகள் பாடி இந்தப் புலவர் பெருமக்கள் தங்களுக்கு அமரத்துவம் கொடுத்துவருகிறார்களே என்றுதான் என் நெஞ்சம் நஞ்சைச் சுரந்தது.

நந்தி: ?ஆஹா, என்ன கவிதைப் பித்தம் மகேந்திரா, இந்தா, இந்த ஆசனத்தில் வந்து அமர். தினமும் உன் உள்ளம் கவிதைக் கடலில் திளைக்கட்டும். ஆனால், தம்பி, உன் பாடல்களை மட்டும் நான் இப்போதே கேட்டாக வேண்டும்.

மகேந்: அண்ணா, என்னை மன்னிக்கவேண்டும். ஒரு காலத்தில் தங்கள் உயிரை வாங்குவதற்காகக் கொலைகாரனாகி, கையில் வாளெடுத்து, பதுங்கிப் பதுங்கித் தங்கள் படுக்கையறைக்கு வந்தேன். இன்றோ, தங்களுக்கு எங்கே ஆபத்து நேருமோ என்று பாடலைப் பாடவும் என் வாய் தயங்குகிறது.

நந்தி: மகேந்திரா, உன் வாக்கிலுள்ள சக்தியை நான் அறியத்தான் செய்கிறேன். ஆனால் அந்தப் பாடல்கள் அனைத்தையும் கேட்டுவிட்ட பின் நான் இறந்தால்தான் என்ன? ஜன்ம சாபல்யம் கிட்டிவிட்ட பிறகு இந்த பூத உடலைத் தாங்கி இங்குக் கிடப்பானேன்? ஆகட்டும், முதல் பாட்டு என்ன துறையில் அமைந்திருக்கிறது?

மகேந்:-அண்ணா..................

நந்தி:-என்ன, சொல்லமாட்டாயா? என் உள்ளத் துடிதுடிப்பை ஆற்ற மாட்டாயா?

பிரம:-மன்னர் பிரானே, எங்கள் கோரிக்கைக்கிணங்காவிட்டாலும் தங்கள் தம்பியின்....

மகேந்:-[உள்ளங் கரைந்து] மந்திரியாரே, யாருடைய கோரிக்கையும் என் அண்ணனின் மனத்தை மாற்ற முடியாது--இந்த விஷயத்தில். நாட்டார் காதை யடைத்த தங்கள் உத்தரவு நாட்டின் நாயகன் காதை அடைக்க முடியாதென்று எனக்குத் தெரிந்து விட்டது. அண்ணா, கவிதையைக் கேளாதபடித் தங்களைத் தவிக்க விடுவது

'அம்பிகா தேவி'யில்
எம்.வி. ராஜம்மா. பி.கே. சரஸ்வதி

தான் உயிர் பறித்தலைக் காட்டிலும் பெரிய சித்திரவதை என்று எனக்குத் தெரிந்துவிட்டது. இனித் தங்களை அந்த வேதனைக்காளாக்க என் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆனால்.........

நந்தி:-இன்னும் ஒரு 'ஆனாலா'

மகேந்:-இல்லை, தமிழ்த் தெய்வமே, இல்லை. நான் கட்டாயம் பாடிவிடுகிறேன். ஒரே ஒரு நிபந்தனைக்குமட்டும் தாங்கள் இணங்க வேண்டும்.

நந்தி:-எதற்கும் நான் தயார் என்பதை அறியாயா மகேந்திரா?

மகேந்:-கேளுங்கள். பாடல்களைப் பாடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். அரண்மனை வாசலி லிருந்து மயானம் வரையிலும் தொண்ணூற்றொன்பது பந்தல்கள் அமைக்க வேண்டும். மயானத்தில் நூறு

'ராஜவிக்ரமா'வில் ராஜம்மாவும் கெம்பராஜும்

வது பந்தல் அமைத்து, அதன் கீழ்ச் சந்தனக் கட்டைகளை அடுக்கிக் காஷ்டமும் அமைக்க வேண்டும். தாங்கள் பல்லக்கில் ஏறிக்கொண்டு ஒவ்வொரு பந்தலின் கீழும் நிற்க வேண்டும். வரிசையாய்ப் பாட்டுகளைப் பாடுவேன். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு பந்தல் எரிந்து சாம்பலாகும். கடைசிப் பந்தலில், சந்தனக் காஷ்டத்தின் மீது தாங்கள் படுத்திருக்கையில் நான் கடைசிப் பாட்டைப் பாடி முடிக்க வேண்டும். இது தான் நிபந்தனை.

நந்தி: இவ்வளவுதானே? பிரமராயரே இதற்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள். தம்பி, ஓடிவா. உன்னை வாரி அணைத்துக் கொள்ள வேண்டு மென்று என் மனம் பதைக்கிறது. [இறங்கி வந்து அணைத்துக்கொள்ளுகிறான்] தம்பி! என் தம்பி! தமிழ்த்தம்பி!

இரண்டாங் காட்சி

குடிகள் [இருவர்]: வாருங்கள், வாருங்கள், ஓடி வாருங்கள். இத்தனை தூரம் ஓடிவந்து கடைசியில் நமது மகாராஜாவின் முகதரிசனங் கூடக் கிடைக்காமல் போய்விடப் போகிறது.

மற்றொருவர்: ஐயோ எல்லாப் பந்தல்களும் எரிந்து கிடக்கின்றனவே. நாம் வந்தது இந்த அக்கினியின் ஆர்ப்பாட்டத்தைப் பார்க்கத்தானா?

இன்னொருவர்: இல்லை, இல்லை. அதோ பாருங்கள். மகாராஜா இப்போது தான் காஷ்டத்துக் கருகில் செல்லுகிறார்கள். அதோ, காஷ்டத்தில் படுத்துக் கொள்ளுகிறார்கள்.

மூன்றாமவர்: ஐயோ அந்தத் தேஜஸ் ஒரு அணுவளவு கூடக் குறையக் காணோமே. ஏதோ மஞ்சத்திலே துயில் கொள்ளச் செல்பவர் போலல்லவோ நிம்மதியாயிருக்கிறார்!

முதல்வர்: இருங்கள், மகாராஜா ஏதோ பேசுகிறார்கள்.

நந்தி: மகேந்திரா, இத்தனை நேரம் உணர்ச்சியின் வயப்பட்டுப் பாட்டைப் பொழிந்து வந்த நீ இப்போது மட்டும் ஏன் இப்படித் தயங்குகிறாய்?

மகேந்: ஐயனே, தமிழரசியே என் வாயை யடைத்து விட்டாளே.

பிரம:-வேந்தர் திலகமே, இந்தக் கடைசிப் பாட்டை மட்டுமாவது கேட்காமல் நிறுத்தக்கூடாதா?

நந்தி: தெவிட்டாத தெள்ளமுதமாகிய தமிழ்க் கவிதையைப் பருகப் பருகத்தான் தாகம் பின்னும் அதிகமாகிறது. தமிழ்த் தெய்வத்தின் திருவடியை நெருங்கி விட்டேன். இங்கு வந்தா நீங்களெல்லாம் தடை போடுவீர்கள்? மகேந்திரா, தயங்காதே; கடைசிக் கவியையும் பாடி ஆர்த்தை முடித்துவிடு.

மகேந்: [மௌனம்]

நந்தி: ஆகட்டும் மகேந்திரா. என்னால் இனிப் பொறுக்க முடியாது. என் அன்னை தன் மடித்தலத்துக்கு என்னை அழைக்கிறாள்.

மகேந்: வானுறு மதியை அடைந்ததுன் வதனம்............

'இன்பவல்லி'யில் பி. எஸ். சரோஜா

நந்தி: உம், ஏன் நிறுத்துகிறாய்? இதோ மாமதியின் தண்ணிலவு என்னைக் கவிந்து கொண்டு விட்டது. நடக்கட்டும்; மேலே பாடு.

மகேந்: வானுறு மதியை அடைந்ததுன் வதனம்......

பிரஜைகள்: ஐயோ காஷ்டத்தில் நெருப்புப் பொறி.

நந்தி:-கலங்காதீர்கள். நான் இன்பசாகரத்திலேதான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். மகேந்திரா, ஆகட்டும்.

மகேந்: வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு பலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்த உன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்
எந்தையே நந்தி நாயகனே.

பிரஜைகளின் ஓலம், அலறல் : ஐயோ காஷ்டத்தின் அடியில் தீ நன்றாகப் பிடித்துக் கொண்டு விட்டதே! எம்மையனே, நாங்கள் என் செய்வோம். எவ்விடம் புகுவோம். எந்தையே! நந்தி நாயகனே! எந்தையே! எந்தையே..................

நந்தி: வீரமிக்க தமிழ்க்குடிகளே, நீங்கள் எதற்காக இப்படிக் கையற்று நிற்கிறீர்கள். உங்களை ஆண்ட மன்னவன் தமிழ்த் தேவியின் திருவாக்கிலெழுந்த புனிதத் தீயில் குளிக்கிறானே என்று நீங்கள் மகிழ்ச்சியல்லவா கொள்ளவேண்டும்? இத்தனைக் காலமும் கொலு மண்டபத்திலே புலவர் திலகங்களின் கவிதைகளைக் கேட்கும் போதெல்லாம் என்னை இழந்து அந்தக் கவியின் வயப்பட்டுத் தானே நின்றிருக்கிறேன்? ஏதோ அவ்வப்போது சில நிமிஷ காலம் என்னை இழந்து நின்றவன் இப்போது என் தம்பியின் திறமையால் நிரந்தரமாகவே கவி மயமாகிறேன். நிரந்தரமாகவே அந்த அன்னையின் திருவடி நிழலில் வீற்றிருக்கப் போகிறேன். எதோ, சொல்லுங்கள் அவளுக்கு வாழ்த்து. செந்தமிழ்ச் செல்வி!

நந்தி: கன்னித்தண்டமிழ்!—

அனைவரும்:-வாழ்க!

நந்தியும் பிரஜைகளும் சேர்ந்து: வாழ்க தமிழ் மொழி! வாழ்க நிரந்தரம்! வாழிய வாழியவே!

—:o:—

* டில்லி ரேடியோ நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது.

இங்கர்ஸால்
இயம்புகிறான்

அதிகமான நன்மையைச் செய்யுஞ் சக்தியை மனிதனுக்கு அளிப்பது சத்தியந்தான். சத்தியமே கவசம்; சத்தியமே ஆயுதம்; அதுவே ஆத்மாவின் விளக்கு.

* * *

மனிதனுடைய சிறந்த தொழில் நாணயமான கடவுளைச் சிருஷ்டிப்பதுதான்.

* * *

மதமானது நண்பர்களுக்குப்பதிலாகச் சத்துருக்களைத்தான் சிருஷ்டிக்கிறது.

* * *

பிச்சைக்கார சுபாவமும் கோழைத் தனமும் நிறைந்த ஒரு தாய் வயிற்றிலிருந்து என்ன மாதிரியான குழந்தை பிறக்குமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

* * *

அடிமைத் தனத்தின் மூலமாக மோட்சத்தை அடைவது கேவலமானது.

* * *

அறியாமையைத் தவிர்த்து வேறோர் அடிமைத்தனம் இல்லை.

* * *

எந்த ஒரு வீட்டில் புத்தகசாலை இருக்கிறதோ அந்த வீட்டில்தான் ஆத்மா இருககிறது.

* * *

புத்திசாலிகளைவிடமூடர்கள்தான் உலகத்திலே அதிவேகமாக அபிவிருத்தியடைகிறார்களென்பதும் ஒரு துக்ககரமான உண்மை.

* * *

உங்களுக்கென்று என்ன உரிமை கொண்டாடுகிறீர்களோ அதே உரிமையை எல்லா மனிதர்களுக்கும் வழங்குங்கள். இயற்கையின் சுபாவங்கள் உள்ளே புகுமாறு உங்கள் மனதைத் திறந்து வையுங்கள். புதிய எண்ணங்களுக்கு முகமன் கூறி வரவேற்புக் கொடுங்கள். அப்போதுதான் நாம் முன்னேற முடியும்.

* * *

பணக்காரனின் மாளிகையை விட ஏழையின் குடிசையில்தான் அதிகமாக அன்பு இருக்கிறது.

'சோனா. முனா' வின் குட்டிக் கதைகள்

பொறுமை

பஸ் ஸ்டாப் ஒன்றில் ஒய்யாரி ஒருத்தி நின்றாள். நவ நாகரீகம். பெங்கால் ஸேரி, கையிலே பளபளப் பிளாஸ்டிக் பை. காலிலே மினுக்கும் பிளாஸ்டிக் செருப்பு. சர்வம் பளபளப்பு மயம். தன்னையே கவனித்து நிற்கும் அழகனைக் கவனித்த அவள் மிகமிக மகிழ்ந்து போனாள். அவனையே ரொம்ப நேரம் பார்த்து நின்ற அவன் துணிந்து அவள் அருகில் வந்தான். தன் அழகுக்கு வெற்றி, தனது வசீகர சக்தியின் வலிமை என எண்ணிய சிங்காரி மிடுக்காக நின்றாள். அத்தகைய ரசிகனின் வியப்பு நோக்கு பெறுவதில் அவளுக்கு இருந்த மகிழ்வு! அவன் அருகில் வந்து நின்றான். என்னவோ கேட்க வாயெடுத்தான். அவள் அகந்தையாக அவனைப் பார்த்தாள். 'என்ன வேணும்?' என்று கர்வமாகக் கேட்டாள். 'இந்தப் பிளாஸ்டிக் வேனிட்டி பேக் விலை என்ன? எங்கே வாங்கினீர்கள்? ரொம்ப அழகாக இருக்கிறது. பிளாஸ்டிக் செருப்பு கூட......' அவன் புகழ்மொழியை முழுவதும் கேட்கப் பொறுமை இல்லை அவளுக்கு. 'இடியட்,' என முனங்கி விட்டு இடித்துக் கொண்டு மற்றவர்களை விலக்கி அவசரமாக ஏறினாள் அப்பொழுதுதான் வந்து நின்ற காரிலே. அவளுக்கு ஆத்திரம், ஏமாற்றம், எரிச்சல், கோபம், வெறுப்பு எல்லாம்தான்! பொறுமைகூட. அவள் வீடு போய்ச் சேர்ந்ததும் செய்த முதல் வேலை பிளாஸ்டிக் பையை அடுப்புத் தீயில் போட்டது தான்.

ரொம்ப லேசு!

டைரக்டர் (ஆர்ட்., காஸ்ட்யூம்ஸ், அது இது சகலத்துக்குமே)—படத் தயாரிப்பாளர்—கதை வசன உற்பத்தியாளர்—முதலாளி—சகலகலா விநோத வல்லப ஸ்ரீமான் சோணாசலம் அவர்கள் சொன்னார்:

'என்ன, கதை எழுதுறது ஒண்ணும் கஷ்டமேயில்லை. பாருங்க, நான்தான் பிளாட் கிளாட்டெல்லாம் பார்த்து, ஒரு மாதிரி ஸீனரியோல்லாம் எழுதியிருக்கிறேன். டயலாக்தான் எழுதணும்..... டயலாக் எழுதுறது கஷ்டமே யில்லை. ரொம்ப லேசு. யாரும் எழுதி விடலாம். அந்தப் படத்துக்குக் கூட நான் தான் எழுதினேன். அவரு கொஞ்சம் டச் பண்ணினாரு. அவ்வளவு தான்...படத்துக்குப் பாட்டு எழுதுறது ரொம்ப லேசு.

வாடா எந்தன் ராஜா,
இந்தாடா ஒரு ரோஜா,
பண்ணிடுவேன் பூஜா,
பாலிருக்கு ஒரு கூஜா,

—பாட்டாச்சு. இவ்வளவு தானே! எதுவுமே கஷ்ட மில்லே. ஆக்ட் பண்றது கூட லேசு. இப்போ பலபேரையும் படத்துக்கு ஏற்பாடு பண்றது ஏன்? எல்லோரையும் ஆதரிக்கணுமேங்கிற நல்லெண்ணம் தான் காரணம்......'

இப்படி அடிக்கடி சொல்லிச் செயலாற்றி வந்தார். ஆர்ட்—டிரஸ்—அது இது சகல டைரக்டர்—படத் தயாரிப்பாளர் (உங்களுக்குத்தான் தெரியுமே...வகையரா...வகையரா!) ஸ்ரீமான் சோவன்னா.

அவர் தயாரித்த படம் வெளிவந்தது. எல்லோரையும் ஆதரித்த அவர் படத்தைப் பொதுஜனம் ஆதரிக்கவில்லை. எல்லோரும் ரொம்ப கஷ்டமில்லாமலே, ரொம்ப லேசாகச் சொல்ல முடிந்தது:

'அந்தப் படம் தானே. அதை விமர்சிப்பது ரொம்ப லேசு அல்லவா! அது சுத்த அமிஞ்சிப் படம். வெறும் பாடாவதி!'

எழுத்தாளர்!

எழுத்தாளர் பரமசிவம் ஒரு கவிதை எழுதி பிரபல பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பி வைத்தார். அது மார்ச் மாதம், ஏப்ரல் இதழில் வந்து விடும், பணம் பத்து ரூபாய் கிடைக்கும் என நம்பினார். இதைச் சொல்லி நண்பர்களிடம் கடன் வாங்கினார். வீட்டு வாடகைக்குக் கடன் சொன்னார்.

ஏப்ரல் இதழ் வந்தது. அவர் கவிதை வரவில்லை. பரமசிவம் பாடு பரமசங்கடமாகி விட்டது. 'கண்டிப்பாக அடுத்த மாத இதழில் வந்து விடும். பணமும் வரும். அவசியம் தருகிறேன்' என்று சால்ஜாப்பு சொன்னார்.

மே மாதம் வந்தது. பத்திரிகையும் வந்தது. அவர் கவிதையும் வந்து விட்டது.

நாட்கள் ஓடின. சன்மானம் வரவில்லை. ஆசிரியருக்குக் கடிதம் எழுதினார். பதிலை எதிர் பார்த்தார்.

ஒரு நாள் ஒரு கார்டு வந்தது—

'அன்புடையீர், சந்தர்ப்பங்கள் சதிசெய்கின்றன. எங்கும் வறட்சி. நமது பத்திரிகைக்கோ படு வறட்சி. ரொம்ப நஷ்டம். அதனால் தங்களுக்குச் சன்மானம் அனுப்ப இயல வில்லை. தங்கள் விஷய தானத்துக்கு நன்றி......ஆசிரியர்.'

எழுத்தாளர்—கடனாளர்—அப்பாவி பரமசிவம் தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

என்ன உசத்தி?

ஸ்ரீமான் மண்ணாங்கட்டியா பிள்ளைக்கு இரண்டு மனைவிகள். உலக இயல்புப்படி அவருக்கு இளையவள் மீது ரொம்ப மோகம். மூத்தவளைக் கவனிப்பதே இல்லை.

மூத்தவளுக்குத்தான் அலட்சியம் செய்யப்படுவதின் காரணம் புரியவில்லை. 'அவளுக்கு நான்

என்ன மட்டமா? என்று கேட்டது மனம். அவரிடமே கேட்டுவிடத் துணிந்தாள். அதனால், இளையவள் நின்ற போது அவளது ஆடையைப் பற்றி உரிந்து விட்டு, தானும் நிர்வாணமாகி நின்றாள். 'சொல்லும். அவ மட்டும் என்ன உசத்தி? என்கிட்டே இல்லாததைப் புதுசா பிரமாதமா அவகிட்டே என்ன கண்டு விட்டீர்? சொல்லும்—எனக்கும் தெரியனும் பாரும்!' என்று கத்தினாள்.

ஸ்ரீமான் மண்ணாந்தை பிள்ளை மண்ணாந்தையாகத்தானிருந்தார்.

கொடுக்கல் வாங்கல்

கூரை வீட்டுக் குப்புசாமி வீட்டுக்கு ஓடு போட விரும்பவில்லை. 'தட்டட்டி' போடவும் விரும்பவில்லை. 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்' என்பதில் அழுத்தமான நம்பிக்கை அவனுக்கு. 'கொடுக்க விரும்பி வருகிற தெய்வம் கூரை இல்லாமல்; ஓடும் தட்டட்டியுமாக இருப்பதைப்பார்த்து விலாசம் தெரியாமல் போய் விடும், என்ற பயம். ஒரு சமயம் சூறைக் காற்று வந்தது. கூரையை அலக்காகப் பிய்த்து எடுத்துத் தூக்கி யெறிந்து விட்டது. காத்திருந்த கள்ளப்பயல் எவனோ உள்ளிறங்கி அகப்பட்டதை அள்ளிக் கொண்டு போய் விட்டான்.

காலையில் எழுந்ததும் குப்புசாமி கூரை இல்லாததைக் கண்டான். 'கொடுக்கிற தெய்வம்' வந்து போயிருப்பதாக மகிழ்வுற்று, அவசர அவசரமாக ஆராய்ச்சி செய்தான். பிறகு 'லபோ லபோ' என்றடித்துக் கொண்டான்.

'இந்தக் காலத்து மனுசங்க மாதிரித்தான்! தெய்வமும் இருக்கு. பிடுங்கித் தின்னித் தெய்வம் சதிகாரச் சுரண்டல் தெய்வம் என்று நொந்து கொண்டான்.

இப்போதெல்லாம் பழமொழிகளைத் திருத்துவது அவன் தொழில். முதன் முதலாகப் புது மெருகு பெற்று உருவானது இது:—

'பிடுங்கித் தின்னும் தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டாவது தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளும்.'

தொழிற் பெருமை

பேனாவை வைத்துப் பிழைத்து விடலாம் எனத் துணிந்த எழுத்தாளர் சொள்ளமுத்து ஒரு மாதக் கடைசியில் கணக்குப் பார்த்தார்.

வரவு இனம்: ரூபாய் பூஜ்யம், அணா ஸீரோ, பைசா சுன்னம்.........

உடலை விற்றுச் சம்பாதிக்கத் துணிந்த அம்முக்குட்டி ஒரு வாரக் கடைசியில் கணக்குப் பார்த்தாள், செலவெல்லாம் போக 'அஞ்சோ பத்தோ' இருக்கு என்று தோன்றியது அவளுக்கு. துல்லியமாகக் கணக்குப் போடத் தெரியாது அம்மாளுக்கு.

காரை வீட்டுக் கனகாங்கி ஒரு நாள் இரவு வேலைக்குப் பின் வரவை எண்ணிப் பார்த்தாள். சேர்ந்திருந்தது ரூபாய் முப்பத்தஞ்சு. என்ன? அஞ்சு பேரோ ஆறு பேரோ வந்து போனாங்க போலிருக்கு என்று தோன்றியது அவளுக்கு.

நட்சத்திர மாகாத நடிகை அம்புலுக்கு ஒரு மணிநேர வேலைக்குக் கூலியாக ரூபாய் ஐம்பது கிடைத்தது. அவளுக்கு 'அது போதும்' என்ற திருப்தி.

பிரபல நட்சத்திரம் பூமாவுக்கு இரண்டு நிமிஷ வேலைக்கு வரவு ரூபாய் நூறு...பழ வகைகள்... ஒரு நெக்லஸ் முதலியன.

எழுத்தாளர் சொள்ளமுத்து இருண்ட வீட்டின் கரிய அறையின் இருள் மூலையிலே உட்கார்ந்தபடி எழுதி முடித்தார்—உலகம் ஒன்று. உயிர் வகைகள் பல. வாழ்வு ஒன்று. வாழும்விதங்கள் பல. தொழில் ஒன்று. கூலியின் தரங்கள் பல.

சகடம் போல்

பார்பர்ஷாப் பக்கிரிசாமிக்கு அவன் தொழிலில் அலுப்புத் தட்டியது. வாழ்வில் புதுமை தேவை என்று தோன்றியது.

அதனால் தமிழ் நாட்டில் ஒரு புதிய பத்திரிகை உதயமாயிற்று. ஆசிரியர் என்று பெருமையாச் சொல்லிக் கொள்கிறவர்கள் தொகையிலே ஒரு கூட்டல் கணக்கு.

சுயேச்சை எழுத்தாளர் சோணாசலம் வாழ வேண்டும் என விரும்பினார். கதை எழுதிப் பிழைக்க முடியாது என்பது நன்றாகப் புரிந்தது.

பட்டணத்து ஜனத்தொகையில் ஒரு நபர் குறைந்தது. எங்கோ ஒரு ஊரில் 'நியோ மெட்ராஸ் ஹைஜினிக் ஸலூன' உதயமாயிற்று.

ரேடியோ வழக்கம்போல் ஒரு பாட்டை அடிக்கடி அலறியது—'சகடம் போல் சுழன்று வருதே சராசரங்கள்...சகடம் போல்....'

அப்பனும், மகனும்

'அப்பா அப்பா! நான் எப்படி பிறந்தேன்?' என்று வழக்கமான கேள்வியை ஒரு சின்னப் புள்ளை தன் அப்பாவிடம் கேட்டான்.

'உன்னை தவிட்டுக்கு வாங்கினோம்டா' என்றாள் அம்மாள். 'கொக்கு கொண்டு வந்து போட்டது' என்றார் அப்பா.

புதுயுக மூளைப்பான பையன்—அந்தப் புள்ளையின அண்ணன், ஆறும் வகுப்பு படிப்பவன்—'அப்படீன்னா அம்மா வயித்திலே கருப்பையில் ஏதோரிப்போ. அவ டாக்டரிடம் காட்ட வேணும் அல்லது அப்பாவிடம் ஏதோ கோளாறு, அவர் டாக்டரிடம் பார்ப்பது நல்லது' என்றான. அவன் 'குழந்தை எப்படிப் பிறக்கிறது?' என்பது போன்ற புத்தகத்தைத் திருட்டுத் தனமாகப் படித்துத் தேறியவன்!

யோக—மங்களம்